தொகுதி 8] [பகுதி 1

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ஹு சித்திரை மீ
APRIL 1943

பிரசுர கர்த்தர்கள் :
தென் இந்திய ஆசிரியர் சங்கம்
520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்

பக்கம்

1. பிள்ளைகளின் தனித்தனித் தேர்ச்சியைப் பரிசோதித்துப் போதிக்கும் முறை—S. ராமஸ்வாமி அய்யங்கார் .... 283
2. சங்கீதம் .... .... .... .... 287
   —K. R. ராமலிங்கம்
3. கல்வியும் இளஞ்சாரணீயமும்—VIII .... .... 294
   —K. K. லக்ஷ்மி நாராயணன்
4. சிறுவர் பகுதி .... .... .... .... 296
   —S. ஜகன்னாதன்
5. 33-வது சென்னை மாகாணக் கல்வி மகாநாடு—1943 .... 299
6. செய்தித் திரட்டு .... .... .... 300
7. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 305

## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினல் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 42.
செங்கற்பட்டு — Ch. 31, 33.
தஞ்சாவூர் — Tan. 34, 35, 74, 78, 79, 80.
திருச்சி — Tri. 50, 56.
ராமனாதபுரம் — Rd. 15.
திருநெல்வேலி — Tin. 1, 69, 72, 76, 83.
சேலம் — S. 60.

குறிப்பு.—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

## THE SOUTH INDIA TEACHERS' UNION

### Notice

The annual General Body meeting of the South India Teachers' Union will be held on Tuesday the 11th May 1943 at 9 a.m. in the Conference Hall, Voorhese College, Vellore. The following will be the agenda :—

1. Minutes of the last meeting.
2. Consideration and adoption of the annual reports for 1941—42 and 1942—43.
3. Election of office-bearers.
4. Election of members to the Vigilance Committee.
5. Amendments to the rules of the Union given notice of by Sri S. Srinivasan of Chengam. (*Vide* page 156 of the South Indian Teacher of April 1942.)
6. Any other urgent business with the permission of the President.

*15th April 1943.*

T. P. SRINIVASAVARADAN, *Hon. Secretary.*
S. T. RAMANUJA IYENGAR, *Joint Secretary.*

# பாலர் கல்வி

| தொகுதி 8 | 1943 ௵ ஏப்ரல் ௴<br>ஸுபாநு ௵ சித்திரை ௴ | பகுதி 1 |
|---|---|---|


## பிள்ளைகளின் தனித்தனித் தேர்ச்சியைப் பரிசோதித்துப் போதிக்கும் முறை !’

## சில அனுபவங்கள்


ஸ்ரீ S. ராமஸ்வாமி அய்யங்கார், தலைமை ஆசிரியர்,
போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பென்னாகரம்.


‘தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு’ என்னும் பொய்யாமொழி, மனிதனுக்கு இயற்கையாக அமைந்துள்ள அறிவு, கற்கக் கற்க விளக்கம் பெற்று வளரும் என்பதனைக் காட்டி நிற்கின்றது. எனவே, ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரின் அறிவு வளர்தற்கான ஓர் சாதனமேயன்றி அறிவை உற்பத்தி செய்யும் இயந்திரமல்ல—சக்தியல்ல. இதை ஆசிரியர் மனதிற்கொண்டு, சிறந்த போதனா முறையைக் கையாண்டு, மாணவரின் அறிவு விருத்திக்கு ஆவன செய்வது சிறந்த புண்ய கைங்கரியமாகும். இப்பரந்த உலகில் ஆங்காங்கே பல கல்விச் சாலைகள் உள. மாணவரின் அறிவு விருத்திக்கான சாதனமாகிய பல போதனாமுறைகள் ஆங்காங்கே கையாளப்பட்டு வருகின்றன. சில பாடசாலைகள், மாணவர்களை மிகக் கட்டுப்பாடுள்ள கால அட்டவணையின் கீழ்க்கொண்டு வராமல், அவர்களிஷ்டப்படி படிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கின்றனவாம். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ‘டால்டன்’ முறை அமுலில் இருந்து வருவதாகத் தெரிகிறது. இவைகளிலிருந்து சிறந்த போதனா முறையின் அவசியம் தெற்றென விளங்கும்.

இம்முறைகளில், பிள்ளைகளின் தனித்தனித் தேர்ச்சியைப் பரிசோதித்து அறிந்து போதிக்கும் முறை சிறந்ததாம்.

ஆரம்பப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களின் தேர்ச்சி, ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு நியாயப்படி இருக்கவேண்டிய அளவில் இல்லாமலும், அப்படியிருப்பினும் தேர்ச்சி விகிதம் மிகவும் குறைந்தும் காணப்படுகிறதென்று டிபார்ட்மெண்டாரும், "பையன் ஆறுமாத காலமாகப் பாடசாலைக்குப் போகிறான்; இன்னும் ஒரு அக்ஷரம்கூட வரவில்லை" என்று பெற்றோரும் குறை கூறுகின்றார்கள். இது நியாயமான குறையே. இத்தகைய நிலைமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவையெல்லாம் இப்பொழுது ஆராய்வது நோக்கமல்ல. பெற்றோர்களும் இத்தகைய நிலைமைக்குப் பெரிதும் காரணமென்றாலும் ஆசிரியர்கள் எந்த அளவில் காரணம் என்பதை உணர்ந்து ஆவன செய்தல் கடமையாம்.

ஆசிரியர்களும் காரணம் என்றபொழுது அவர்கள் கையாளும் முறையில் ஏதோ தவறு இருக்கிறதென்பதை யூகிக்கலாம். எனவே தகுந்த முறையாகிய 'தனித்தனியே பரிசோதித்துப் போதிக்கும் முறை'யை நன்கு கையாண்டு இக்குறையை நிவர்த்திக்க வழி தேடல் ஆசிரியரின் கடன் ஆம்.

சில செகிண்டரி பாடசாலைகளில் வேகம், விஷய ஞானம் ஆகியவற்றை விருத்திசெய்ய சிறிதளவு சிரத்தை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. 'டால்டன்' முறையும் மற்றும் அது போன்று பயிற்சி அப்பியாசங்கள் கொடுக்கும் முறை ஆங்கு கையாளப்படுகின்றனவாம். **(Method of work by assignments)** இவைகளால் ஏற்படும் பலன் தைர்யத்தை ஊட்டுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பப் பாடசாலைகளில் கால உணர்ச்சி, அதாவது இவ்வளவு நேரத்திற்குள் இவ்வளவு விஷயத்தை அறியவேண்டுமென்ற உணர்ச்சி **(Time sense)** அதிகமிருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இக்கால விஷயம் **(Time factor)** ஆசிரியர்களின் கவனத்தை அதிகமீர்க்கவேண்டும். ஆசிரியர்கள் கால அட்டவணையில் ஒவ்வொரு பாடத்திற்கும் குறிக்கப்பட்டுள்ள கால அளவுகளை **(periods)** மாத்திரம் கொண்டு அதன்படி நடந்தால் மட்டும் போதாது. சாதாரணமாக, வருஷமுடிவில் ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகள் மேல் வகுப்புக்கு மாற்றப்படவேண்டும் என்று டிபார்ட் மெண்டாரால் வெளியிடப்பட்டுள்ள கொள்கையை ஆசிரியர்கள் வேறுவிதமாகப் பொருள்கொண்டு, வகுப்பிலுள்ள எல்லாப்பிள்ளைகளையும் மேல்வகுப்புக்கு மாற்றி விடுகிறார்கள். இது வீண்பழியல்லவென்பது சிலபாடசாலைகளில், அவ்வப்பொழுது பிள்ளைகளின் தேர்ச்சியை அறிய யாதொன்றும் செய்யாமலிருப்பதிலிருந்து அறியலாம். கல்வியதிகாரிகள், "பிள்ளைகளை எவ்விதமாகப் பிரித்துப் போதிக்கிறீர்கள்" என்று கேட்டால் **(grouping of pupils)** பதிலில்லை. மேல் வகுப்பிற்கு

எத்தனை பிள்ளைகள் மாற்றப்படலாம் என்பதையும் அவர்கள் உடனே சொல்ல முடிவதில்லை.

காரணம்—பிள்ளைகளைத் தனித்தனியே கவனித்து, ஒவ்வொருவரின் தேர்ச்சியையும் அறிந்து போதிப்பது என்னும் விஷயம் (**Problem of individual attention**) சோதனை ஆசிரியர் கவனத்தை அதிகம் கவரவில்லை. இனி இம்முறையைக் கையாளும் விஷயமாக சில அனுபவங்களைக் கூற விரும்புகிறேன். முதல் வகுப்பில் 'பாஷை' என்பதை எடுத்துக்கொள்ளுவோம். நான் வேலை பார்த்துவரும் பென்னாகரம் ஹையர் எலிமெண்டரிபாடசாலையில் முதல்வகுப்பில் ஒரு ஸெக்ஷனில் உள்ள நாற்பத்தைந்து பிள்ளைகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் அதில் மூன்று பிரிவுகள் இருக்கக் கண்டேன்; (1) நல்ல தேர்ச்சியுள்ளவர்கள் (2) சாதாரண அறிவுள்ளவர்கள் (3) சாதாரண அறிவிற்கும் குறைந்தவர்கள். இவை பின்வரும் முறையால் கண்டு பிடிக்கப் பட்டது. அதிக பழக்க வழக்கத்தில் உள்ள வார்த்தைகள் (**Words of high freqency Value**) பனிரெண்டு அடங்கிய ஒரு அட்டை கார்டு (**Flash Card**) பிள்ளைகளின் முன்பு மூன்று நிமிஷங்கள் வைக்கப்பட்டது. பிறகு எடுத்து மறைக்கப்பட்டது. தாங்கள் பார்த்த வார்த்தைகளைக்கவனப் படுத்தி, மூன்று நிமிஷங்களுக்குள் எழுதும்படி பிள்ளைகளுக்குக் கூறப் பட்டது. மூன்று நிமிஷங்கள் ஆனவுடன் சமிக்ஞை செய்ய பிள்ளைகள் உடனே எழுதுவதை நிறுத்தினார்கள். பதினைந்து பிள்ளைகள் எல்லா வார்த்தைகளையும் எழுதிவிட்டார்கள். இவர்கள் ஒரு நிமிஷத்துக்கு நான்கு வார்த்தைகள் வீதம் எழுதினார்கள். பதினைந்து பிள்ளைகள் ஒரு நிமிஷத்திற்கு மூன்று வார்த்தைகள் வீதம் எழுதினார்கள். பத்து பிள்ளைகள் இரண்டு வார்த்தைகள் வீதம் எழுதினார்கள். சாதாரணப் பிள்ளைகளுக்கும், கீழ்த்தரப்பட்ட பிள்ளைகளுக்கும் வேறு வகை வார்த்தைகள் வைத்துப் பரிசோதித்ததில் முன்பு மூன்று வார்த்தைகள் எழுதிய சாதாரண அறிவுள்ளவர்கள் இப்பொழுது நான்கு வார்த்தைகளும், இரண்டு வார்த்தைகள் எழுதிய கீழ்த்தரமானவர்கள் மூன்று வார்த்தைகளும் எழுதலாயினர். இவ்வாறு செய்வதில் கால உணர்ச்சி (**Time sense**) ஞாபகசக்தி, (**Retentivity**) மனோவிழிப்பு, (**Mental alertness**) நன்மை யளிக்கும் போட்டி, (**Healthy spirit of emulation**) ஆகியவைகள் முதல் வகுப்பிலேயே அரும்புவதைக் காணலாம். வேகமாகப் படிக்கும் பழக்கம் கால அளவு ஏற்படுவதன் மூலம் விருத்தி யடைகிறது. இம்முறை நான்காவது ஐந்தாவது வகுப்புக்களில் மௌன வாசிப்பு விஷயத்தில் (**Silent reading**) மிக உபயோகமாகிறது. கீழ் வகுப்பிலேயே பிள்ளைகளின் பார்வையின் சக்தி (**The Vision span**) விருத்தி யடைகிறது. இதுபோன்று இரண்டாம் வகுப்பிலும் 'பாஷை' பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் கீழ்வரும் முடிவு ஏற்பட்டது. நாற்பது பிள்ளைகள் உள்ள

இவ்வகுப்பில் பதினைந்து வார்த்தைகள் கொடுத்ததில் பனிரெண்டு பிள்ளைகள் ஒரு நிமிஷத்திற்கு ஐந்து வார்த்தைகள் வீதமும், பதினைந்து பிள்ளைகள் மூன்று வார்த்தைகள் வீதமும் எழுதினார்கள்; பதிமூன்று பிள்ளைகள் நான்கு வார்த்தைகள் வீதம் எழுதினார்கள். இத்தகைய பரிசோதனைகளை வாரத்தில் இரண்டு பீரியடுகளாவது நடத்தினால் என்னுடைய பரிசோதனையின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டதுபோல வகுப்பில் இரண்டு விதமான மாணவர்களே இருப்பதை யறியலாம். எனவே ஆசிரியர்கள் இரண்டு விதப் பயிற்சி அப்பியாசங்கள் தயாரிக்கவேண்டும்.

**கணிதம்.**

முதல் வகுப்பில் கூட்டலில் மொத்தம் இருபது வரும்படியான கணக்குகள் கொடுத்தேன். நான்கு விதிகளை கொண்டு கற்பிக்கவேண்டுவதற்குரிய உபகரணத்தைக் கொண்டு பரிசோதித்ததில், கீழ்க்காணும் முடிவுகள் கிடைத்தன. பத்துப் பிள்ளைகள் ஒரு நிமிஷத்திற்கு நான்கு கணக்குகள் வீதம் செய்தார்கள். பதினைந்து பிள்ளைகள் மூன்று கணக்குகள் வீதமும், பதினைந்து பிள்ளைகள் இரண்டு கணக்குகள் வீதமும் செய்தார்கள். இதிலிருந்து பிள்ளைகளின் நிலையை நன்கு கவனிக்க முடிவதோடு அவர்களின் அறிவை விருத்தி செய்வதற்கான வழிகளைத் தேடுவதும் எளிதாகின்றது.

இதேபோல் காலவரை ஏற்படுத்திக்கொண்டு நான்காம் வகுப்பில் 'வியாசம்' என்னும் விஷயமாகப் பரிசோதனை நடத்தினேன். வியாசத்தில் வரும் முக்கிய வார்த்தைகள் கரும்பலகைச் சுருக்கமாக எழுதப்பட்டன. வியாசத்திற்குக் கால அளவு இருபது நிமிடங்கள். ஐம்பது பிள்ளைகளில் பதினாறு பிள்ளைகள் பூரா வியாசத்தையும் முடித்துவிட்டார்கள். இருபத்தைந்து பிள்ளைகள் முக்கால் பங்கு வியாசந்தான் எழுத முடிந்தது. மீதிப் பிள்ளைகள் வியாசமே எழுதவில்லை. மறுநாள் விஷயத்தைச் சிறிது குறைத்து வேறு சுலபமான வியாசங்கொடுத்ததில் பெருத்த மாறுதலைக் கண்டேன். எனவே பிள்ளைகளின் தேர்ச்சியைத் தனித்தனியே பரிசோதித்து அறிந்து போதிப்பது எத்துணை சிறப்பினை உடையது என்பது தெற்றென விளங்கும். ஏதோ ஒருநாள் மட்டும் இவ்வாறு செய்தால் போதாது. அவ்வப்பொழுது பரிசோதித்து அறிந்து போதிப்பின் நற்பயனை அடையலாம்.

# சங்கீதம்

**K. R. Ramalingam,**
*Music Teacher, Sri Ramakrishna Vidyasala, Sivaganga.*

## பாடத் திட்டம்

1. நான்காம் வகுப்பு :—

மாயாமாளவ கௌள ராகத்தில் ஸ்வராவளி வரிசைகள்.

மூன்றும் வகுப்பைப்போல் இன்னும் பத்துப் பாட்டுகள்.

2. ஐந்தாம் வகுப்பு :—

ஹெச்சுஸ்தாயி வரிசைகள், தக்குஸ்தாயி வரிசைகள், ராகம், தாளம், ஸ்தாயி போன்ற சாதாரண சங்கீதப் பதங்களுக்கு அர்த்தம் சொல்லிக் கொடுத்தல்.

ஆதி, ரூபக தாளங்களில் அமைக்கப்பட்டதும், பல்லவி, அனுபல்லவி, சரணங்களோடு கூடிய பத்துப்பாட்டுக்கள். உள்ளூர் கதைப்பாட்டுக்களும் சேர்த்துக்கொள்ளலாம்.

ஸ்ருதி ஞானம் :—

சங்கீதத்திற்கு முக்கியம் "ஸ்ருதியும் - லயமும்." இதுபற்றியே மஹான்கள் "ஸ்ருதி மாதா - லயப்பிதா" என்று கூறியுள்ளனர்.

ஆகையால், குழந்தைகளை ஸ்ருதியுடன் சேர்ந்து பாடும் பழக்கத்தை நாம் உண்டுபண்ணவேண்டும்.

நாம் எந்த வாத்தியத்தை ஸ்ருதிக்காக வைத்துக்கொள்ளுகிறோமோ, அதில் வரும் த்வனியுடன் சாரீரத்தை ஒற்றுமைப்படுத்திப் பாடும்படி செய்யவேண்டும்.

**குறிப்பு :—ஸ்ருதி இல்லாமலெப்போதும் பாடவே கூடாது.**

குழந்தைகள் ஸ்ருதியின் ஞானத்தை அடைவது சுலபமல்லவெனினும் அதை விருத்தி செய்ய அடியில் காணும் "ஸ்ருதி ஞான வரிசைகளை" அப்பியசிக்கும்படி செய்தால் குழந்தைகள் எளிதில் ஸ்ருதி ஞானததைப் பெறலாம்.

வரிசைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **I (a)** | 1. | ஸாஸா | பாபா | ஸ்ா ஸ்ா | |
| | | ஸ்ா ஸ்ா | பாபா | ஸாஸா | |
| | 2. | ஸஸஸஸ | பபபப | ஸ்ஸ்ஸ்ஸ் | |
| | | ஸ்ஸ்ஸ்ஸ் | பபபப | ஸஸஸஸ | |
| | 3. | ஸாஸஸ | பாபப | ஸ்ாஸ்ஸ் | |
| | | ஸ்ாஸ்ஸ் | பாபப | ஸாஸஸ | |
| | 4. | ஸாஸஸ | ஸஸபா | ஸஸபா | ஸபஸ்ா |
| | | ஸ்ாஸ்ஸ் | ஸ்ஸ்பா | ஸ்ஸ்பா | ஸ்பஸா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I (b) | 1. | ஸரிகம | பதநிஸ் | ஸா ; | ஸா ; |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸ்ா ; | ஸ்ா ; |
| | 2. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ா ; | பா ; |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸா ; | பா ; |
| | 3. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ாஸ்ா | பாபா |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸாஸா | பாபா |
| | 4. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ாபா | ஸ்ாபா |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸாபா | ஸாபா |
| | 5. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ஸ்ஸ்ஸ் | பபபபு |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸஸஸஸ | பபபபு |
| | 6. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ஸ்பப | ஸ்ஸ்பப |
| | | ஸ்நிதப | மகரிஸ | ஸஸபப | ஸஸபா |

## நான்காம் வகுப்புக்கு

ஸ்வராவளி வரிசைகள்

இராகம் :—மாயாமாளவகௌளவ. தாளம் :—ஆதி.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஸ | ரி | க | ம | ப | த | நி | ஸ் |
| | ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | ஸரிஸரி | ஸரிகம | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிஸ்நி | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ |
| 3. | ஸரிகஸ | ரிகஸரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதஸ் | நிதஸ்நி | ஸ்நிதப | மகரிஸ |
| 4. | ஸரிகம | ஸரிகம | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ |
| 5. | ஸரிகம | பாஸரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மாஸ்நி | ஸ்நிதப | மகரிஸ |
| 6. | ஸரிகம | பதஸரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மகஸ்நி | ஸ்நிதப | மகரிஸ |
| 7. | ஸரிகம | பத நீ | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மக ரீ | ஸ்நிதப | மகரிஸ |
| 8. | ஸரிகம | பதநிஸ் | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மகரிஸ | ஸ்நிதப | மகரிஸ |
| 9. | ஸரிகம | பமகரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மபதநி | ஸ்நிதப | மகரிஸ |
| 10. | ஸரிகம | பமதப | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | மபகம | ஸ்நிதப | மகரிஸ |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | ஸரிகம | ரிகமப | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | நிதபம | ஸ்நிதப | மகரிஸ |
| 12. | ஸரிகம | ஸமகரி | ஸரிகம | பதநிஸ் |
| | ஸ்நிதப | ஸ்பதநி | ஸ்நிதப | மகரிஸ |
| 13. | ஸரிகம | பாபா | ததபா | மமபா |
| | தநிஸ்ா | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ |
| 14. | ஸரிகம | பாகம | பா ; | பா ; |
| | கமபத | நிதபம | கமபக | மகரிஸ |
| 15. | ஸ்ாநித | நீதப | தாபம | பா ; |
| | கமபத | நிதபம | கமபக | மகரிஸ |
| 16. | ஸ்ஸ்நித | நிநிதப | ததபம | பாபா |
| | கமபத | நிதபம | கமபக | மகரிஸ |
| 17. | ஸரிகரி | காகம | பமபா | தபதா |
| | மபதப | தநிதப | மபதப | மகரிஸ. |

**குறிப்பு :—இன்னும் தங்கள் தங்கள் மனோபாவத்துக்குத் தகுந்தபடி மேல் கண்ட வரிசைகளை மாற்றிக்கொள்ளவோ சேர்த்துக்கொள்ளவோ செய்யலாம்.**

## ஐந்தாம் வகுப்புக்கு

### ஹெச்சுஸ்தாயி (மேல்ஸ்தாயி) வரிசைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ா ; | ஸ்ா ; |
| | தநிஸ்ரி | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ. |
| 2. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ா ; | ஸ்ா ; |
| | தநிஸ்ரி | ஸ்ஸ்ரிஸ் | ஸ்ரிஸ்நி | தபமப |
| | தநிஸ்ரி | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ. |
| 3. | ஸரிகம | பதநிஸ் | ஸ்ா ; | ஸ்ா : |
| | தநிஸ்ரி | க்ரிஸ்ரி | ஸ்ரிஸ்நி | தபமப |
| | தநிஸ்ரி | ஸ்ஸ்ரிஸ் | ஸ்ரிஸ்நி | தபமப |
| | தநிஸ்ரி | ஸ்நிதப | ஸ்நிதப | மகரிஸ. |

4. ஸரிகம பதநிஸ் ஸ்ா ; ஸ்ா ;
தநிஸ்ரி க்ம்க்ரி ஸ்ரிஸ்நி தபமப
தநிஸ்ரி க்ரிஸ்ரி ஸ்ரிஸ்நி தபமப
தநிஸ்ரி ஸ்ஸ்ரிஸ் ஸ்ரிஸ்நி தபமப
தநிஸ்ரி ஸ்நிதப ஸ்நிதப மகரிஸ

தக்குஸ்தாயி வரிசைகள்.

1. ஸ்நிதப மகரிஸ ஸா ; ஸா ;
கரிஸநி ஸரிகம ஸரிகம பதநிஸ்

2. ஸ்நிதப மகரிஸ ஸா ; ஸா ;
கரிஸநி ஸஸநிஸ ஸநிஸரி கமபம
கரிஸநி ஸரிகம ஸரிகம பதநிஸ்

3. ஸ்நிதப மகரிஸ ஸா ; ஸா ;
கரிஸநி தநிஸநி ஸநிஸரி கமபம
கரிஸநி ஸஸநிஸ ஸநிஸரி கமபம
கரிஸநி ஸரிகம ஸரிகம பதநிஸ்

4. ஸ்நிதப மகரிஸ ஸா ; ஸா ;
கரிஸநி தபதநி ஸநிஸரி கமபம
கரிஸநி தநிஸநி ஸநிஸரி கமபம
கரிஸநி ஸஸநிஸ ஸநிஸரி கமபம
கரிஸநி ஸரிகம ஸரிகம பதநிஸ்
ஸ்நிதப மகரிஸ ஸா ; ஸா ;

குறிப்பு :—1. குறில் ஸ்வரம் ஒரு அக்ஷரக் கார்வையையும் நெடில் ஸ்வரம் இரண்டு அக்ஷரக் கார்வையையும், , (கமா) ஒரு அக்ஷரக் கார்வையையும் ; (செமிக்கோலன்) இரண்டு அக்ஷரக் கார்வையையும் குறிக்கும்.

2. மேல்கண்ட வரிசைகள் சரியாகப் பாடவந்தபின்தான் தாளத்தைச் சொல்லிக்கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்.

தாளஞானம் :—

முதன் முதலிலேயே குழந்தைகள் லெக்ஷணப்படி தாளத்தைப் போட்டுப் பாடுவதற்கு கஷ்டமாயிருக்கும். ஆகையால் ஆசிரியர்கள் குழந்தைகளின் தாள ஞானத்தை அபிவிருத்தி செய்ய அடியில் காணும் முறையைக் கையாளலாம்.

முறைகள் :—

1. ஒருதட்டு, ஒருதட்டு என்றவாறு போட்டு அப்பியசித்தல்.
2. ஒருதட்டு, ஒரு வீச்சுமாக அப்பியசித்தல்.
3. மூன்றுதட்டும், ஒரு வீச்சுமாக அப்பியசித்தல்.
4. ஒரு தட்டு மூன்று விரல் எண்ணிக்கைகள் என்றவாறு அப்பியாசம் செய்தல்.

மேற்கண்டவாறு அப்பியாசித்தால் பொதுவாக எந்தத் தாளங்களையும் இலகுவாக அனுசரிக்கலாம்.

காலம்:—

ஸ்வரங்களினுடைய வேகங்களின் அளவைக் காட்டுதலே "காலம்" எனப்படும்.

முக்கியமாக காலங்கள் மூவகைப்படும்.

அவையாவன :—

1. முதற்காலம் (ப்ரதமகாலம்).
2. இரண்டாம் காலம் (த்வித்தீய காலம்).
3. மூன்றும் காலம் (த்ருதீய காலம்).

முதற்காலத்தில் தாளத்தின் ஒவ்வொருசெய்கைக்கும் ஒவ்வொரு ஸ்வரமாகவும் இரண்டாம் காலம் மூன்றும் காலங்களில் தாளத்தின் ஒவ்வொரு செய்கைக்கும் முறையே இரண்டு ஸ்வரங்களாகவும் நான்கு ஸ்வரங்களாகவும் பாடவேண்டும்.

குறிப்பு :—காலங்கள் மாறிக்கொண்டு போகும்பொழுது ஸ்வரங்கள் இரண்டிரண்டாக அதிகரிப்பதன்றி வரவர வேகமாகவும் பாடவேண்டும். ஆனால் தாளத்தை ஒட்டவோ யிழுக்கவோ செய்யாமல், ஒரே நிதானமாகப் பாடவேண்டும்.

மூன்று காலங்களையும் தெரிந்துகொள்ளும்விதம் :—

| முதற் காலம் | இரண்டாம் காலம் | மூன்றும் காலம் |
|---|---|---|
| ஸ ரி க ம | ஸ ரி க ம (ஒரு கோடு மேலே) | ஸ ரி க ம (இரு கோடுகள் மேலே) |

ஸ்வரங்களின்மேல் கோடுகளில்லாமலிருந்தால் அதை முதற் காலம் என்றும் ஸ்வரங்களின்மேல் ஒற்றைப் படுக்கைக் கோடிருந்தால் அதை இரண்டாம் காலம் என்றும் ஸ்வரங்களின்மேல் இரண்டு படுக்கைக் கோடுகளிருந்தால் அதை மூன்றும் காலம் என்றும் அறிய வேண்டும்.

### வரிசைகள் கற்பித்தல் :—

கரும்பலகையில் ராகம்-தாளம்-வரிசைகள் இவைகளை விபரமாக எழுதி அவைகளை தப்பிதம் விழாதபடி குழந்தைகளை எழுதிக்கொள்ளும் படி செய்யவேண்டும். பின் ஆசிரியர் இரண்டு மூன்று தடவை அவைகளைப் பாடிக் காட்டவேண்டும். பின் குழந்தைகளும் ஆசிரியர்களும் சேர்ந்து பாடவேண்டும். அதன்பின் குழந்தைகளை மட்டும் தனித்துப் பாடும்படி செய்யவேண்டும். அதன் பிறகுதான் தாளம் சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்.

குறிப்பு :—வரிசைகளை மூன்று காலங்களிலும் கற்பிக்கவேண்டும்.

தனித்தனியே மூன்று காலங்களிலும் பாடும் விதத்தை அடியில் காணும் நமூனவில் எளிதில் அறியலாம் :—

ராகம் - மாயாமாளவகௌளம். தாளம் - ஆதி.

| காலம் | \|4 (லகு) | 0 (த்ருதம்) | 0 (த்ருதம்) |
|---|---|---|---|
| 1-ம் காலம் | ஸ ரி க ம<br>ஸ் நி த ப | ப த<br>ம க | நி ஸ்<br>ரி ஸ |
| 2-ம் ,, | ஸரி கம பத நிஸ் | ஸ்நி தப | மக ரிஸ |
| 3-ம் ,, | ஸரிகம பதநிஸ் ஸ்நிதப மகரிஸ | ஸரிகமபதநிஸ் | ஸ்நிதப மகரிஸ |

குறிப்பு :—'|4' லகு என்பது ஒரு தட்டு 3 விரல் எண்ணிக்கைகளையும் 'O' த்ருதம் என்பது ஒரு தட்டு ஒரு வீச்சையும் குறிக்கும். ஒரு லகுவும் இரண்டு த்ருதங்களும் உடையது ஆதிதாளம்.

### பாட்டுகள் கற்பிக்கும் முறை :—

நாம் எந்தப்பாட்டைக் கற்பிக்கப்போகிறோமோ அந்தப்பாட்டின் ராகம்—தாளம்—இயற்றியவர் பெயர் முதலியவைகளைக் கரும்பலகையில் எழுதி அதன்பின் பாட்டை எழுதவேண்டும். குழந்தைகள் அந்தப் பாட்டைத் தப்பிதங்கள் விழாதபடி எழுதும்படி செய்வது ஆசிரியர்களின் முக்கியப் பொறுப்பாகும். அதன்பின் பாட்டின் பொருள்களை அறியும்படி செய்யவேண்டும்.

ஆசிரியர் இரண்டு மூன்று தடவை அந்தப் பாட்டைப் பொருள் கெடாமல் பதங்களைப் பிரித்துப் பாடிக்காட்ட வேண்டும். அதன்பின் ஆசிரியர்களும் குழந்தைகளும் பாடுதல்—பின் குழந்தைகள் மட்டும் பாடுதல்.

குறிப்பு :—பாட்டு சரியாகப் பாட வந்தபின்தான் தாளத்தைக் கற்பிக்க வேண்டும்.

அபினயப் பாட்டுக்களைக் கற்பித்தல் :—

முதலில் பாட்டைக் கற்பிக்கவேண்டும். பாட்டு சரியாகப் பாட வந்தபின் ஆசிரியர்கள், பொருளுக்குத் தகுந்தபடி அபினயம் பிடித்துக் கற்பிக்கவேண்டும்.

குறிப்பு :—இவ்வகைப் பாட்டுகளைக் கற்பிக்கும் காலத்து பொருளுக்குத் தகுந்த அபினயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

கும்மி கோலாட்டம் கற்பித்தல் :—

இவ்வகை பாட்டுகளுக்கு முக்கிய அம்சம் தாளம். முதலில் பாட்டுகளைக் கற்பித்தல். பின் தாளத்தோடு கற்பிக்கப்படவேண்டும். அதன் பின் தான் மேல்கண்டவைகளைக் கற்பிக்கவேண்டும்.

மேலே கண்ட அபினயப்பாட்டுகள்—கும்மி கோலாட்டம் கற்பிப்பதால் குழந்தைகளுக்கு நல்ல தேகாப்பியாசமுமாக மாகிறது


விளம்பரம்

**மாதாந்திர பாரங்கள்**

மாதாந்திர கணக்கு பாரம் டிம்மி பேப்பரில், தபால் சார்ஜ் உள்பட, 100-க்கு ரூ. 4—8—0 வீதமும், மாதாந்திர பிராவிடெண்டு பண்டு பாரம், தபால் செலவு உள்பட, 100க்கு ரூ. 2—4—0 வீதமும், கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். மணியார்டரிலோ அல்லது தபால் பில்லைகளாகவோ முன் பணம் அனுப்ப வேண்டும்.

**Mr. T. K. RANGANATHAM,**
*Teacher-Manager, Native Ele. School,*
**Nellikuppam, South Arcot District.**

# கல்வியும் இளஞ்சாரணீயமும் - VIII

(K. K. Lakshminarayanan, (*Abiramapuram.*)

(253-ம் பக்கம் தொடர்ச்சி)

**தேசீய சாரணீய நோக்கமும்,** பயனும் :—சாரணீய சங்க சட்ட திட்டங்களையும், நடையுடை பாவனைகளையும், உடுப்புகளையும், அந்தந்த நாட்டுக்குத் தகுந்தவாறு வைத்துக் கொண்டால்தான் அது சௌகர்யமாக இருக்கும். மேலும் மேலும் குன்றுமல் அபிவிருத்தியடைய மார்க்கமுண்டு. இந்த விஷயத்தில் பிறரைப் பார்த்து "புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொள்வது" போல நம் நாட்டுக்குப் பொருந்தாத சில வழக்கங்களையும், பழக்க வழக்கங்களையும் இதர நாட்டுக்குத் தகுந்த சில வழக்கங்களை நம் சாரணீய சட்ட திட்டத்தில் வைத்துக் கொண்டு கஷ்டப்பட நேரிடுகிறது. ஆகையினுல் நம் நாட்டுக்குத் தக்கவாறு பொருத்தமாயுள்ளதாக ஒரு திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டும்.

**உடுப்பு :**—ஏழைச் சிறுவனை காகியில் ஒரு ஷர்ட்டும், ஒரு நிஜாரும் தைத்துக் கொள்ளவேண்டும் என்ற மேல்நாட்டு நாகரீகத்தை மனதில் வைத்துக்கொண்டு கஷ்டப்படுத்தக்கூடாது." "முடவன் கொம்பு தேனுக்கு" ஆசைப்படுவதை யொக்கும். அவன் என்ன செய்வான்? ஆகையால் நாம் அவனுக்கு குறைந்த செலவில் போதிய உடுப்பும் இருக்க எந்த உடுப்பு என்று நிர்ணயித்துக் கொண்டு அதை கமிஷனர் உத்திரவுபெற்று தைத்துக் கொள்ளச் சொல்லலாம். சிக்கனம் சாரணீயத்தின் நோக்கம் என்பதை மனதில் வைத்து வீண் ஆடம்பரம் நமது இயக்கத்தின் கருத்தல்ல. "கருமமே கண்ணுயினர்" என்பதுபோல் கார்யத்தை மனதில் வைத்து போதிய சிக்கன முறையில் உடுப்புகள் தைத்துக் கொடுக்கவேண்டும். இதில் கூடியவரையில் குடிசைத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவரவும், தேசீயப்பற்று உண்டாக்கவும், கைத்தறியில் நெய்யும் துணியையே கூட உபயோகித்துக் கொள்ளலாம்.

**கதைகள், பாட்டு, அபிநயம்:**—கதைகள் சொன்னுல், கூடியமட்டும் உள்நாட்டுக் கதைகளாகவும் தெரிந்த பெயர்களை வைத்தும் கதைகள் சொல்லவும். வீரர்கள் கதைகளும், மஹான்களின் கதைகளும் நம் நாட்டின் ஏராளமாக இருக்க நம் நாட்டுக் குழந்தைகள் என்றும், காதால் கேழ்க்காத பெயர்களாகிய மௌகலி, டபாக்கீ. நீல், ஸ்டோன், கிரீன் போல சொல்லி மனதைக் குழப்பவேண்டாம். அப்படிச் சொன்னுலும், நம் சிறுவர்கள் ஏன் அப்படிப்பட்ட வீரர்களும், மஹான்களும், நம் நாட்டில் கிடையாதா என்று கேட்பார்கள். தவிர நம் நாட்டுப்பற்றிய அபிப்ராயம் குன்றிவிடும். ஆகையால் எல்லாம் நம் நாட்டின் விஷய

மாகவே ஏறக்குறைய இருக்கவேண்டும். இவைகளுக் கெல்லாம், பிற நாட்டிலிருந்து கடன் வாங்கவேண்டாம்.

தாய் பாஷை :—தற்சமயம், உயர்தர பாடசாலேயிலும், ஸெகிண்டரி கிரேட் டிரையினிங்குக்குப் பயிலும் மாணவர்களுக்கும்கூட ஆங்கிலம் தவிர மற்ற இதர பாடங்களெல்லாம் அந்தந்த இடத்தில் வழங்கும் பாஷைகளிலேயே போதிக்கப்படுவதால் நம் இயக்கத்துக்கும் சாரணீய சட்ட திட்டங்களும், பாட்டுகளும், அந்த இடத்தில் வழங்கும் பாஷைகளிலேயே வைத்துக் கொள்ளவேண்டும். இவற்ருல் நம் சிருர்களும் சிறு வயதிலேயே தேசிய உணர்ச்சியுடன் விளங்க இவைகளெல்லாம் சாதனம்.

நம் துர் அதிர்ஷ்டம் :—சாரணீய இயக்கத்தின் காரண கர்த்தராயிருந்த ஸர் ராபர்ட் பேடன்பவல் இந்தியாவிலுள்ள சாரணீயத்தைப் பார்வையிட்டுப் பின் தான் வெளியிட்ட அறிக்கையில் இந்தியரின் குணுதிசயங்கள் அவ்வளவு திருப்திகரம் அல்ல என்று சொல்லிவிட்டார். அந்த சமயத்தில் ஒவ்வொரு இந்தியனுடைய மனமும் கஷ்டப்பட்டது. எப்படியாயினும் சாரண இயக்கத்தின் மூல புருஷர் என்றதற்காக நாம் என்றும் அவரை மறக்கக்கூடாது. அதை யுத்தேசித்தே அவர் புகழுடம்பு இன்னும் இருக்கிறது.

புதிய வருஷமும், புதிய சாரணீயமும் :—மேற் சொன்னபடி எல்லா விஷயங்களேயும் கூடிய வரையில் ஹிந்துஸ்தான் சாரணீய இயக்கத்தில் இருக்கிறது. இருந்தாலும், சாரணீயத்தில் வேற்றுமை கிடையாது, பக்ஷபாதமில்லே என்பதை காட்டுவதற்காக இப்பொழுது இருக்கும், "**Boy Scout**"-ம், "**Hindustan Scout**"-ம், இரண்டும் தனித்தனியே யிராமல் ஒன்று சேர்ந்து புதிய வருஷத்திலாவது பிரகாசிக்கும் என்று நம்புகிறேன். இதற்கு எந்தப் பெரியாராவது முன்வந்து இருக்கும் சாரணீயத்தில் ஒற்றுமைக்குப் பாடுபட்டு ஒரே ஒரு இயக்கமாகிய "**Indian Scout**" என்றதற்கு பாடுபட்டு பேடன்பவல்போல் வருவார்கள் என்ற நோக்கத்துடனேயே இதை எழுதுகிறேன். இப்படிப்பட்ட காரியம் ஒரே நாளில் முடியாது. அதற்காக காரியத்தை நிறுத்தக்கூடாது. "முயற்சியுடையோர் இகழ்ச்சி யடையார்" என்ற மாதிரி பிரயத்தனப்பட முயலவேண்டும். இப்படிப்பட்ட "இந்திய சாரணீயம்" என்ற இயக்கத்துக்கு இன்றே விதை போடவேண்டும்.

[தொடரும்]

# சிறுவர் பகுதி

Sri S. Jagannathan, *Saidapet.*

## I. வேடிக்கைக் கணக்கு

### விநோதச் சதுரங்கள்

| | | |
|---|---|---|
| 5 | 10 | 9 |
| 12 | 8 | 4 |
| 7 | 6 | 11 |

எப்படிக் கூட்டினாலும் ஒரே கூட்டுத் தொகை.

**A.** இடது புறமிருந்து வலதுப்பக்கம் ஒரே வரிசையிலுள்ள எண்கள்.

$$5+10+9=24$$
$$12+8+4=24$$
$$7+6+11=24$$

**B.** மேலிருந்து கீழே ஒரே வரியிலுள்ள எண்கள்.

$$5+12+7=24$$
$$10+8+6=24$$
$$9+4+11=24$$

**C.** குறுக்கு மூலையாக.

$$5+8+11=24$$
$$7+8+9=24$$

இதே மாதிரி விநோதச் சதுரங்கள் அமைக்க ஒரு சுலபமான வழி உண்டு.

நீ எடுத்துக் கொள்ளும் எண் 3-ஆல் மிச்சமில்லாமல் வகுக்கும்படி இருக்கவேண்டும். 15-க்கு மேற்பட்டதாகவு மிருக்கவேண்டும்.

36 எடுத்துக்கொள்.

| | | |
|---|---|---|
| 9 | 14 | 13 |
| | 12 | |
| | | |

36 ÷ 3 ; 12 = 12-ஐ நடுமத்தியில் போடு.

12-க்கு 3 குறைவாக தலைப்பக்கம் இடது மூலையில் போடு.

12-க்கு 2 அதிகமாக அதற்கு நேர் மேலேயுள்ள இடத்தில் போடு.

12-க்கு 1 அதிகமாக தலைப்பக்கம் இடது மூலையில் போடு.

| | | |
|---|---|---|
| 9 | 14 | 13 |
| | 12 | |
| 11 | 10 | 15 |

இதன் பின்பு எப்படிக் கூட்டினாலும் 36 வரும்படி பாக்கியுள்ள எண்களைப் போடு.

14+12=26 : பாக்கி 10.
9+12=21 : பாக்கி 15.
13+12=25 : பாக்கி 11.

இனிமேல் வெகு சுலபமாய்ப் போட்டு விடலாம்.

| | | |
|---|---|---|
| 9 | 14 | 13 |
| 16 | 12 | 8 |
| 11 | 10 | 15 |

9+11=20 : பாக்கி 16.
13+15=28 : பாக்கி 8.

இதே மாதிரி 45, 21, 54, 60 முதலிய எண்களுக்கு விநோதச் சதுரங்கள் போட்டுப் பார்.

## II. விடுகவிகள் :

கீழே கூறியுள்ளவை மிருகங்களைக் குறிக்கின்றன. எந்த மிருகம் என்று சொல்லுவாயா ?

1. இறக்கையுண்டு பக்ஷியே அல்ல, குட்டி ஈன்று பால் கொடுக்கும்
மிருகமேயல்ல. பகலிலே தூங்கும் அந்தியில் பறந்து ஓடும்.
எனக்கு வேண்டாம் பூசனிக்காய் என்று பக்ஷிகள் தள்ள
எனக்கு வேண்டாம் பூசனிக்காய் என்று விலங்குகள் விலக்க
நடுவில் நின்று தவிக்கிறான் தடுமாட்டக்காரன். அவன் யார் ?

2. மிருகத்தில் பெரியோன், கருமை நிறமுள்ளவன், யானையுமல்ல
பால் ஈந்திடும் பசுவுமல்ல.
யமன் ஏறும் பரி இதுவே. அது என்ன ?

3. உடம்பு எல்லாம் உரோமம் உண்டு
வால் அடர்ந்திருக்கும் கீரியல்ல ;
மரமேறிக் கிளைக்குக்கிளை தாவுவான்
பழம் தின்பான், குரங்குமல்ல ;
முதுகிலே மூன்று வரிகள் உண்டு
நெருப்பு சுட்ட புண் அல்ல ;
ஸேது கட்ட சகாயம் செய்த உதியன் இவனே ! அவன் யார் ?

4. காவலுக்குக் கெட்டிக்காரன் பூட்டுமல்ல
காலுண்டு கண்ணுண்டு காவலாள் அல்ல
ஓடியாடித்திரிந்து ஊரைக் காப்பான் போலீஸான் அல்ல
நாற்காலன், நம்பிக்கையாளன், தருமன் வழிகாட்டி; இவன் யார்?

5. தொந்தி பெருத்தவன், குட்டைக் காலன்
நீண்ட மூக்கன் பூமியைத் தொண்டிடுவான்
தோட்டிபின் போவான் தோட்டி வேலை செய்திடுவான்
பெருத்த சம்சாரம் பின் தொடரும்
சேறு கண்டவிட சுவர்க்கம் ஆகும்
ஓர் அவதாரப் பெயர் பெற்றவன். அவன் யார்?

6. பொறுத்தவர் பூமியாள்வர் பொங்கினவர் காடாள்வர்
பகலெல்லாம் பொறுத்து வேலை செய்தான்
இரவில் பொங்கி தடிகொண்டு அடி வாங்கினான். அவன் யார்?

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

**சுவாமி விவேகாநந்தர்**

**ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.**

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | | | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்**, மயிலாப்பூர், சென்னை.

# 33RD MADRAS PROVINCIAL EDUCATIONAL CONFERENCE, 1943

## Notice to all members

SIR,

It has been proposed by the Working Committee of the Reception Committee to hold the Provincial Educational Conference on the 10th and 11th May 1943, in the College Hall (Cobb Memorial Hall, Voorhese College), Vellore. The delegates will be accommodated in the College and High School hostels. Electric lights and running water are available in these buildings.

The entertainment committee conveners have fixed the charge for boarding and entertainment at Rs. 1-8-0 per day—chota, breakfast, lunch and dinner will be provided and bathing and other conveniences arranged.

(The enhanced prices of the food-stuffs compel us to give this rate which may be considered rather high in normal times.)

The following is the programme of the Conference :—

| Day. | Date. | Time. | Proceedings. |
|---|---|---|---|
| Sunday ... | 9— 5—43 | 4 to 5 p.m. ... | S. I. T. U. Executive Board meeting. |
| | | 5-30 p.m. ... | S. I. T. U. Protection Fund Trust meeting. |
| Monday ... | 10— 5—43 | 10 a.m. to 12 noon ... | Opening of the Conference and Exhibition. |
| | | 2 p.m. ... | Opening of the Geographical Conference. |
| | | 4 p.m. ... | Symposium on Post-war Education— (i) Primary, (ii) Secondary, and (iii) University. |
| | | 6 p.m. ... | Public lecture. |
| | | 7 p.m. ... | Subjects Committee meeting. |
| | | 10 p.m. ... | Entertainment. |
| Tuesday ... | 11— 5—43 | 9 a.m. ... | S. I. T. U. General Body meeting. |
| | | 10 a.m. to 12 noon ... | Resolutions and symposium on postwar education. |
| | | 3 p.m. ... | Geographical Conference (concluding session ) |
| | | 4-30 p.m. ... | Resolutions. Concluding session of the general conference. |
| | | 9 p.m. ... | Entertainment. |

# செய்தித் திரட்டு

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்.

(a) தேநீர் கச்சேரி :—13—3—43ல் இப்பள்ளிக்கூட வருடாந்திர நாடகத்தை யொட்டி, ஹைகோர்ட்டு வக்கில் ஸ்ரீ சுப்பராய அய்யர் அவர்கள் ஓர் தேநீர் விருந்து நடத்தினர். பல பிரமுகர்கள் வந்திருந்தனர். ஸ்ரீ அனந்தாசாரியரால் ஒரு பாட்டுக் கச்சேரியும், சிறுவர் சிறுமிகளால் ஓர் கதம்பக் கச்சேரியும் நடைபெற்றன.

(b) 16—3—43ல், இவ்விரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டராயிருந்து தற்சமயம் வெளியூருக்கு மாற்றப்பட்டிருக்கும் ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் அவர்களுக்கு இப் பள்ளிக்கூட மானேஜ்மெண்டும் உபாத்தியாயர்களும் சேர்ந்து ஓர் பிரிவுபசாரம் நடத்தினர்.

(c) 25—3—43ல், இப்பள்ளியின் குருளையர் மந்தை, செஞ்சிலுவைச் சங்கம் இவைகளின் வருடாந்திர விழா சைதாப்பேட்டை முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ ஏ. கே. ராகவன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. முனிசிபல் ஹெல்த் ஆபீஸர் ஸ்ரீ சொக்கலிங்கம் அவர்கள் "சுகவாழ்வு நடத்தும் விதம்" என்பதுபற்றிப் பேசினர்.

(d) 29—3—43ல் இப் பள்ளிக்கூடத்தின் வருடாந்திரப் பந்தய விளையாட்டுகள் சைதாப்பேட்டை Y.M.C.A. காலேஜில் நடைபெற்றன.

(e) 30-3-43ல் சைதாப்பேட்டை ரேஞ்சு ஆசிரியர்கள் மகாநாடு டைரக்டர் ஸர் ஆர். எம். ஸ்டாதாம் துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பொருட்காட்சியையும் திறந்துவைத்தார். சிறுவர் சிறுமிகள் ஓர் கதம்பக் கச்சேரி நடத்தினர்.

## போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன், கோவூர்.

12—3—43ல், இவ் வட்டத்துப் பரிசோதகர் ஸ்ரீ ஜே. ஏ. மதுரம் அவர்கள் திருநெல்வேலிக்கு ஜில்லாக் கல்வி அதிகாரிக்கு முதல் உதவி உத்யோகஸ்தராக மாற்றப்பட்டதை முன்னிட்டு, இவ்வூரைச்சார்ந்த ஆசிரியர்களால் ஒரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது. அவர் ஆசிரியர்களுடன் பழகிவந்த முறையையும் அன்னர் கல்வி அனுபவங்களை ஆசிரியர்களுக்கு எடுத்துக் காட்டி மேன்மையுறச் செய்ததையும் பாராட்டிப் பலர் பேசினர்கள்.

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்.

26—3—43ல் செங்கல்பட்டு சப்கலெக்டர், ஸ்ரீ டி. எஸ். சுவாமிநாத அய்யர் இப்பாடசாலையைப் பார்வையிட்டு மாணவர்கள் செய்து காட்டிய உடற் பயிற்சிகளைப் பாராட்டினர்.

27—3—43 போலீஸ் டிப்டி சூப்பரிண்டெண்டு ஸ்ரீ ஏ. சுந்தரம் பிள்ளை இப்பாடசாலையைப் பார்வையிட்டுப் பாராட்டினர்.

4—4—43ல் செங்கற்பட்டு ஜில்லா ஆவணப்பதிவாளர் ஸ்ரீ வி. எம். ஏகாம்பர ராவ் அவர்கள் உள்ளூர் சப்ரிஜிஸ்தராருடன் விஜயம் செய்து பாடசாலை அலுவல்களைப் பார்வையிட்டுப் புகழ்ந்தார்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஸ்ரீபெரும்புதூர்.

13—3—43ல், இடைநிலைப் பள்ளி பூகோள ஆசிரியர் ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாசராவ் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் பூனமல்லி பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ நவராஜன் 'புதுமுறை பூகோள பாடங்களை' 2 முதல், 5 வகுப்பு வரையில் போதிக்கும் முறையைப்பற்றிப் பேசினர். பின்பு கிருஸ்தவர்களுக்கு விசேஷ தினங்களாகிய, **Good Friday, Christmas,** இவைகளுக்கு ஆரம்ப பாடசாலைகளுக்கு லீவ் விடும்படி ஜில்லாபோர்டாரைக் கேட்டுக்கோள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், தண்டராம்பட்டு.

20—3—43ல் ஆசிரியர் ஸ்ரீ என். கோபால கிருஷ்ணன் தலைமையில் கூடிற்று. தாலூகா கான்பரன்ஸ் ஏப்ரல் மாதத்தில் நடைபெற விருப்பதால் அதற்குப் பண வசூல் செய்து அனுப்பும்படி செங்கம் செண்டர் காரியதரிசி கேட்டுக்கொண்டார். பின்பு, ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திலும் முதியோர் கல்வியில் ஊக்கமும் உடைய ஸ்ரீ வில்வராய் அவர்கள் ஜில்லா கல்வி அதிகாரிக்கு உதவி உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டதைப்பற்றி மகிழ்ச்சியைத் தெரிவித்தும், சம்பளங்களை ஒவ்வொரு மாதமும் 12 தேதிக்குள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய ஜில்லாபோர்டை வேண்டிக்கொள்ளவும் தீர்மானித்தது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், உமர் ஆபாத்

27—3—43-ல் கூட்டத்தில் இச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ வீ. ஆர். சுப்பிரமணிய அய்யரை, 33-வது கல்வி மகாநாட்டுக்கு பிரதிநிதியாக அனுப்பத் தீர்மானித்தது. பெண் கல்வி விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டுவர அனுமதி யளிக்கப்பட்டது.

---

## விழுப்புரம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன், வழுதாவூர்

14—3—43-ல் மகாசபை, ஸ்ரீ வி. கிருஷ்ணமாச்சாரியார் தலைமையில் கூடிற்று. காருண்ய போர்டார் மார்ச்சு முதல் மாதம் ரூ. 1 வீதம் ஆறு மாதத்திற்கு பஞ்சப்படி கொடுத்துதவுவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஆசிரியர்களின் கஷ்ட நிலைமையை உத்தேசித்து சென்ற ஆகஸ்டு மாதம் முதலே ரூ. 3 வீதமாவது பஞ்சப்படி கொடுத்து உதவுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

---

## எய்டெட் எலிமெண்டரி பாடசாலை, சூளேஸ்வரன்பட்டி

17—3—43-ல், ஸ்ரீ எம். ராமசாமி கவுண்டர் தலைமையில், இப் பாடசாலை பெற்றோர் சங்கம் நடந்தது. பல பெற்றோர்களும் பிரமுகர்களும் வந்திருந்தனர். மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டத்தால் வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர். தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஜி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் 'பள்ளியும்பெற்றோர் சங்கமும்' என்பதுபற்றிப் பேசினர்.

---

## ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பள்ளிபாளையம்

28—3—43-ல் மாணவர் சங்கத்தின் 10-வது ஆண்டுவிழா ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ வி. நடராஜன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்

பட்டது. மாணவர்களால் கோலாட்டம், ஹாஸ்ய நடிப்பு, சம்பாஷணை முதலியவை நடைபெற்றன. தலைவர் மாணவர்களுக்குப் புத்தி கூறினார்.

20—3—43-ல் பள்ளிபாளையம் கொமாரபாளையம், செண்டர் ஆசிரிய சங்கங்களின் ஆண்டுவிழா ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ வி. நடராஜன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஏ. சுந்தரேசன் பாட்டுகள் பாடினார். ஆர். வெங்கடராமய்யர் 'கம்பர் கவி' என்பதுபற்றிப் பேசினார் தலைவர் முடிவுரையில் தமிழ் பாடங்களை எளிதில் போதிக்கும் விதத்தையும், யுத்த முயற்சியைப் பற்றியும் பேசினார்.

---

### மதராஸா இஸ்லாமியா எலிமெண்டரி பாடசாலை, ஈரோடு

இப்பாடசாலையின் ஆசிரியர்களின் முயற்சியால் மாணவரிடையே ஸ்தாபிக்கப்பட்ட மாணவர் சங்கத்தின் முதலாண்டு விழா வெகு சிறப்புடன் மூன்று தினங்களில் பின்வருமாறு நடைபெற்றது:—

20—3—43-ல், நகரக் கல்வி யதிகாரி ஸ்ரீ நீலகண்ட சாஸ்திரி, ரெவரெண்டு பாப்ளி துரை, இவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, கல்விப்பிரசாரங்களடங்கிய அட்டைகள் கொடிகள் தாங்கி அனேக மாணவ மாணவிகள் ஆசிரியர்களுடன் ஊர்வலம் சென்றனர். இது பெற்றோர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. பல முஸ்லிம் பிரமுகர்கள் ஊர்வலத்தை அங்கங்கே தேக்கி சிற்றுண்டி முதலியன வழங்கியது போற்றத்தக்கது.

21—3—43-ல் குழந்தைகளின் ஆடல்பாடல், சம்பாஷணை முதலியவைகளும், பிரமுகர்களுடைய சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

22—3—43-ல் மூன்று மைல் தூரத்திலுள்ள காவிரிக்கரை மாந்தோப்பிற்கு உல்லாசப் பிரயாணம் சென்று வந்தனர்.

---

### சொக்கலிங்க வித்யாசாலை, லக்ஷ்மீபுரம்

30—3—43-ல், பள்ளத்தூர் பிரதம டாக்டராகிய ஸ்ரீ காந்திமதிநாத பிள்ளை அவர்கள் தலைமையில் 'கம்பர் விழா' ஆரம்பமாயிற்று. ஆசிரியர் ஸ்ரீ ராமானுஜம் பிள்ளை 'கம்பர் கவியின்பம்' என்னும் பொருள்பற்றிப் பேசினார். மாணவ மாணவிகள் 'கம்பர்' என்னும் பொருள்பற்றி சொற்பெருக்காற்றியும், ஆடல்பாடல் நிகழ்த்தியும் மகிழ்வித்தனர்.

---

### ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாசாலை, சிவகங்கை.

8—3—43-ல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பிறந்ததினக் கொண்டாட்டம் பழைய மாணவர்களால் கொண்டாடப்பட்டது. காலையில் ஆராதனம், குழந்தைகளுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. மாலையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல பிரமுகர்கள் சொற்பொழிவாற்றினர். இரவு பஜனையுடன் இனிது முடிவுற்றது.

---

### ஆரம்ப ஆசிரியர் சங்கம், பாலக்கோடு (சேலம்)

20—3—43-ல் மாரண்டஹள்ளி போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீராகவேந்திரராவ் தலைமையில் கூடித் தீர்மானித்ததாவது:—

" தத்சமயம் ஒரு ரூபாய் வீதம் கொடுத்து வரும் யுத்தப்படி, மிகவும் குறைவு. விலைவாசிகள் மிகவும் அதிகரித்திருக்கும் இச்சமயத்

தில் மிகவும் குறைந்த சம்பளம் பெறும் ஆசிரியர்களுக்குக் குறைந்தது ரூபாய் ஐந்தாவது கொடுத்து ஆதரிக்கவேணுமாய் ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறது.''

---

### போர்டு பாடசாலை, வெள்ளார், பெற்றோர் சங்கம்.

20—3—43-ல் ஆருவது சங்கம் நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். உபாத்தியாயர்கள், யுத்தப் படக்காட்சி, தற்கால யுத்தம், கல்வி முதலியனபற்றி சொற்பொழி செய்தனர். உபாத்தியாயினி ஸ்ரீவள்ளியம்மாள், தாய்மார் கடமை, பெண் கல்வி என்ற விஷயம்பற்றி பேசினர். மாணவர்கள் 'ஹர்ஷர்' என்ற சரித்திரத்தை சீன்களுடன் திறம்பட நடித்துக் காட்டினர். பெண்பாலிகைகள் டான்ஸ் நடித்தது மிகவும் அழகா யிருந்தது.

---

### டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்.

20—5—43-ல் கீழலங்கம் கல்லூரி தலைமை ஆசிரியர் ஸ்ரீசுவாமிநாதய்யர் தலைமையில் கூடிற்று. இச்சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீதுரைசாமி முதலியார் அவர்கள் தற்கால கல்வியின் நோக்கம் பற்றியும், சரித்திர பாடம் கற்பித்தல்பற்றியும் விரிவாகப் பேசினர்கள்.

---

### அம்மன் கோயில் ஆரம்ப பாடசாலை, கும்பகோணம்.

3—4—43-ல் இப்பாடசாலை ஆண்டுவிழா, அரசினர் கல்லூரித் தலைவர் ஸ்ரீ கே. வி. சாக்கோ அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், அபிநயப்பாடல், யுத்தப்பாடல், பூகோளப் பாடல், கதை சொல்லல், குருவிளையர் விளையாட்டுகள் முதலியன நடைபெற்றன. வாணாதுரை பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஸ்ரீனிவாச சர்மா 'பெற்றோர்களும் ஆசிரியர்களும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் குழந்தைகளின் வேடிக்கைகளைக் கண்டு மகிழ்வுற்றார், திறமையாக நடித்தவர்களுக்கு வெள்ளி மெடல் பரிசளிக்கப்பட்டது.

---

### அம்பாசமுத்திரம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன், சேர்மாதேவி

28—3—43-ல் அரை விருஷக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ டி. கணபதி தலைமை வகித்தார். (1) சமீபத்தில் வெளியான சார்ஜண்டு கமிட்டியின் சிபார்சுகளை சர்க்கார் உடனே அமுலுக்குக்கொண்டு வரவேணுமாயும், (2) ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தது ரூ. 6 அலவன்ஸ் கொடுக்கவேணுமென்றும், (3) காகிதம் கன்ட்ரோல் ரேட்டுக்குப் பாடசாலைகளுக்குக் கிடைக்க சர்க்காரே ஏற்பாடு செய்யவேண்டுமாயும், (4) சர்க்கார் சிப்பந்திகளுக்குப்போல் ஆசிரியர்களுக்கும் மண்ணெண்ணை ரேஷன் கார்டு வழங்கும்படியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### போர்டு ஹையர் ஆரம்ப பாடசாலை, வள்ளியூர்.

22—3—43-ல் இப்பள்ளிக்கூட தினமும் பரிசு விழாவும், ஜில்லா போர்டு தலைவர் ராவ்சாகிப் முத்துசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் சார்பாகவும், மாணவர் சங்கத்தின் சார்பாகவும் வரவேற்புப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன

பிறகு நாங்கூனேரி ஹைஸ்கூல் சரித்திர ஆசிரியர் ஸ்ரீ பிரமநாய கம்பிள்ளை 'ஆரம்பக்கல்வியும் ஆசிரியர்களும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். வரவேற்புப் பத்திரத்தில், இப்பொழுது கொடுத்து வரும் ரூ. 1—8—0 பஞ்சப்படி போதாதென்றும், சர்க்கார் சிப்பந்திகளுக்கொப்ப அளிக்க வேண்டுமென்றும் இதர சிப்பந்திகளுக்குப்போல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் உரிமைகள் அளிக்கவேண்டுமென்றும்கேட்டுக் கொள்ளப்பட்டது. தலைவர் அவர்கள் தம்மாலானவரை எவ்வளவு உதவிபுரிய முடியுமோ அதைச் செய்வதாகக் கூறினர்.

---

## போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, மேட்டுப்பாளையம் (திருச்சி)

14—3—48 ல் மாணவர் போட்டிப் பந்தய விழாவும், 25—3—43 ல் வாலி பால் போட்டிப்பந்தயமும் நடைபெற்றன. 28—3—43 ல் மாணவர் சங்க ஆண்டுவிழா, தாத்தையங்கார் பேட்டை சப் ரிஜிஸ்டரார் ஜனப் முகம்மது அப்துல் லதீப் சாகிப் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. போட்டிப்பந்தயங்களில் ஜெயித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைமை ஆசிரியர் அம்பலவாணன் அவர்கள் 'பெற்றோருக்கு ஒரு வார்த்தை' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். மாணவ மாணவிகள் சிறு சம்பாஷணைகள் நடத்தினர்.

---

## ஓர் வேண்டுகோள் — கிரேடு சண்டை வேண்டாம்

சுமார் இரண்டு மாதமாக செங்கற்பட்டு ஜில்லாபோர்டு ஆசிரியர்களிடையே செகண்டரி கிரேடுகளில் சிலருக்கும், ஹையர் கிரேடுகளில் பலருக்கும் மனத்தாங்கல் பரவிவருகிறது. அதற்குக் காரணம் ஜில்லா போர்டாரால் கணக்கிடப்படாத (1934—38) நான்கு வருஷ சர்வீசை அந்தக் காலத்திருந்த சிறுபான்மையோரான செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்காவது கொடுக்கவேண்டுமென ஜில்லாக்கமிட்டியில் மெம்பர்களைக் கலவாது தீர்மானம்செய்து அனுப்பியதேயாகுமென்று சொல்லப்படுகிறது.

நமது கட்டுப்பாட்டை அதிகார வர்க்கத்தினரில் சிலர் யூனியன் தோன்றியதுமுதல் செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பிரிந்து போகும்படி தூண்டிவருவது தெரியும். அவர்களால்தான் இச்சங்கடம் ஏற்பட்டிருக்கும் என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. தவறு ஏற்படுவதுண்டு. ஆனல் தவறுசெய்ய இசைந்தது வருந்தத்தக்கதே. தவறு செய்திருந்தால் அதைக் கண்டித்து ஒழுங்கு செய்யவேண்டியது ஒற்றுமையுள்ள ஆசிரியர்களின் கடமையாகும். பிறர் ஏளனம் செய்யவும், ஒற்றுமைக் கழகம் நாசமடையவும் செய்யவேண்டாம் என்பதே என் வேண்டுகோள். தூண்டுதலுக்கு உடன்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் தோழர்களின் நன்மையை நாடிச்செல்லவேண்டும். விடுபட்டுப்போன சர்வீசை சிலருக்குமட்டும் கொடுத்துவிடுவார்கள் என்று ஐயுறவேண்டாம். அனைவரும் உயர்வுச் சம்பளம்பெற ஆவன செய்து, சண்டை ஒழித்து ஒற்றுமையை நாடுமின்கள் யானும் அவ்விதம் செய்வன்.

பணிவுள்ள ஆசிரிய நண்பனும் ஜில்லாக்கமிட்டி காரியதரிசியுமான

சி. பாலசுப்ரமணியம், கோவூர்.

# பத்திராதிபர் குறிப்புகள்

## சார்ஜண்டு கமிட்டியின் சிபார்சு

மத்திய சர்க்காரின் கல்வி ஆலோசனைக் கமிட்டி, ஆசிரியர்களின் சம்பளம், வேலைத்திட்டம், பயிற்சி முதலிய விஷயங்களை ஆலோசித்து தக்க சீர்திருத்தங்களை சிபார்சுசெய்ய ஒரு தனி கமிட்டி நியமித்திருந்தது. இக்கமிட்டிக்கு ஜான் சார்ஜண்டு துரை தலைமை வகித்தார். மாகாணக் கல்வி அதிகாரிகள் பலர் இதில் அங்கத்தினர்கள். நமது கல்வி அதிகாரியாகிய Sir மேவரில் ஸ்டாதாமும் ஒரு மெம்பர். இந்த கமிட்டியின் சிபார்சு முழுவதும் வெளிவரவில்லை. அதிலுள்ள சில அம்சங்கள் பத்திரிகைகளில் சமீபகாலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நம் நாட்டில் பல ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் சில நடுத்தரப் பள்ளிக்கூடங்களிலும் ஆசிரியர்கள் பெறும் ஊதியம், கவர்ன்மெண்டு ஆபீஸ்களிலுள்ள சாதாரண வேலையாட்கள் பெறும் சம்பளத்தைக் காட்டிலும் மிகக் குறைவென்பதை எடுத்துக் காட்டியுள்ளார்கள். நாகரிகமுள்ள நாடுகளுடன் சம உரிமையுடன் இருக்க விரும்பும் ஒரு நாடு, ஆசிரியர்களை இக்கேவல நிலையில் வைத்து வாளாயிருப்பது அழகாகாது என்று கூறியுள்ளார்கள். பல ஆரம்ப ஆசிரியர்கள் பெறும் சம்பளம், மானிடர்களுக்கு மிக அவசியமான வசதிகளை அடைய முடியாவண்ணமும், மற்ற அறிவாளர்களுடன் சிநேக முறை ஏற்படக் கூடாவண்ணமும் அவ்வளவு குறைவாயிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இக்கமிட்டியார், ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு ரூ. 30—1—35—1—50 என்ற சம்பள திட்டம் சிபார்சு செய்துள்ளார்கள். கிராமங்களிலுள்ள ஆசிரியர்கள் தங்கியிருக்க வீடு அல்லது வாடகைக்காக சம்பளத்தில் 10 சதவீதமும் கொடுக்கவேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளார். இது தவிர, வாழ்க்கைச் சிலவு அதிகமாயுள்ள இடங்களுக்கு இந்த திட்டத்தை 50 சதவீதம் உயர்த்தவேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளார். இக்கமிட்டியார் இச்சிபார்சு செய்யும் காலத்து, இத் திட்டம் போதுமானது என்று கருதுவதாகத் தெரியவில்லை. இப்பொழுது இருக்கும் கேவல நிலையிலிருந்து, நியாயமாக இருக்கவேண்டியதற்கு இது முதல் படியாகும் என்றே சொல்லுகிறார்கள். ஒரு நிருபர் நமக்கு எழுதியபடி, "ஏனையோர்கள் எல்லாம் ரோல்ஸ் ராய்ஸ்க் காரில் ஊன்று சென்றால் ஆரம்ப ஆசிரியர் கட்டைவண்டியிலாவது செல்ல வேண்டாமா?" உதவிபெறும் பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்கள் பெரும்பாலோர் இப்பொழுது ரூ. 14 தான் பெறுகிறார்கள். செகெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு ரூ. 18 வீதம் உதவி யளிக்கப்படுகிறது. இச்சொல்ப தொகையைக்கொண்டு, ஆசிரியர்கள் எவ்வாறு கவலையற்று ஜீவிக்க முடியும்? கவலையுள்ளோன் தன் வேலையைச் சரிவர செய்யமுடியுமா?

சார்ஜண்டு கமிட்டி சிபார்சை மேல்கொண்டாவது ஆசிரியர் களின் சம்பளத்தை உயர்த்த நமது துரைத்தனத்தார் முயற்சிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாமா? இக்குறைந்த சம்பளவிகிதத்துக்கே 2 கோடி ரூபாய் மாகாண கவர்மெண்டார் சிலவழிக்க வேண்டியிருக் கிறதே, என்று ஏங்குவதில் பிரயோஜனமில்லை. சார்ஜண்டு கமிட்டியார் கூறியுள்ளபடி ஆரம்பக்கல்வியின் முன்னேற்றம், மத்திய சர்க்காரின் பொறுப்பாகும். எனவே, ஆசிரியர் சம்பளச்சிலவில் பாதி தொகையை அவர்கள் மாகாணங்களுக்கு மான்யமாக வருஷந்தோறும் கொடுக்க வேண்டுமென்ற சிபார்சு கவனிக்கத்தக்கது.

---

### யுத்த அலவன்ஸ்

"அரிசி ரூபாய்க்கு 2 படி, பருப்பு $1\frac{1}{2}$ படி, புளி வீசை ரூபாய் 1. இதேமாதிரி பண்டங்களின் விலை 3 முதல் 5 மடங்காக ஏறிவிற்கிறது. இதற்கெல்லாம் ஒருவழி பிறக்க வேண்டாமா?....நல்ல காலத்திலேயே வாழ்க்கைக்கு ஈடுசெய்ய முடியாத ஊதியத்தைப்பெற்று உயிரைக்கையி லேந்தி ஊசலாடிய ஆசிரியர்களுக்கு தற்பொழுது கிடைக்கும் பணத் தைக்கொண்டு என்ன செய்ய முடியும்?" என்றவாறு பல நிருபர்கள் நமக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். இதேபோல் பல, ஆசிரியர் சங்கங் களிலும் யுத்தப்படி கொடுக்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டுள்ளன. எனினும், ஆசிரியர்கள் கஷ்டம் நீங்குவதாகயில்லை. மற்ற துறைகளில் வேலைபார்க்கும் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் யுத்தப்படி கொடுக்கப்படுகிறது, ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஏன் இந்த சலுகைக் காட்டக்கூடாது? வாய்குளிற 'ஆசிரியர் செய்யும் தொண்டு மிகச் சிறந்தது' என்றும் அவர்கள் தியாகம் மிகவும் போற்றத்தக்கது என்றும், பேசிவிட்டால் போதுமா? சில ஸ்தல ஸ்தாபனங்களில், ஆசிரியர்தவிர மற்ற எல்லா சிப்பந்திகளுக்கும் யுத்தப்படி கொடுத்துள் ளார்களாம், அது என்ன அநீதி? ஜில்லா ஆசிரியர் சங்கங்கள் இவ்விஷ யத்தை சற்று கவனித்தல் நலம். ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளைக்கண்டு, ஆரம்ப ஆசிரியர்களுக்கு யுத்தப்படி கொடுக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டி யுத்தப்படி கொடுக்கும்படி வற்புறுத்த வேண்டும்.

---

## THE SOUTH INDIA TEACHERS' UNION

### Notice

There will be a meeting of the Executive Board of the S.I.T.U. on the 24th and 25th April 1943. Members of the Board are requested to attend. The agenda for the meeting will be sent to the members separately.

T. P. SRINIVASAVARADAN,
*Hon. Secretary.*

*15th April 1943.*

# S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

## நீங்கள்

## இந்த நிதியில்

## சேர்ந்து விட்டீர்களா?

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

**ரூபாய்க்கு 2 அணு விதம் போனஸ்**

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

# பொருளடக்கம்


பக்கம்

1. 33-வது மாகாணக் கல்வி மகாநாடு .... .... 307
—தலைவர், குருகுல தர்மாசார்ய ஸ்ரீ கே. ரங்கசாமி அய்யங்கார், பி. ஏ., பி. எல்., எல். டி.

2. செய்தித் திரட்டு .... .... .... 317

3. பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... 325


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ, அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 45.
செங்கற்பட்டு — Ch. 9.
வட ஆற்காடு — NA. 35, 45, 59, 65.
தென்னாற்காடு — SA. 81.
தஞ்சாவூர் — Tan. 2, 8, 13, 40, 50A, 76, 77.
திருச்சி — Tri. 2.
ராமனாதபுரம் — Rd. 55, 56, 64.
மதுரை — Md. 2, 23, 28.
திருநெல்வேலி — Tin. 30.
சேலம் — S. 5, 17, 56, 66.
கோயமுத்தூர் — Co. 2, 8, 9, 13, 38.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்